# மட்டுநகர் சிறைத் தகர்ப்பு

## புதியதோர் திருப்பம்



# மட்டுநகர் சிறைத்தகர்ப்பு
# புதியதோர் திருப்பம்

பிரச்சாரச் செய்திப்பிரிவு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. EPRLF

விற்பனையாளர்கள் :

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
அஞ்சல் பெட்டி எண் : 5551
சென்னை - 600 094

முதற் பதிப்பு : 1984 செப்டம்பர் 23

அட்டைப்படம் : ஓவியர் சேய்

**BATTICALOA JAIL BRACK**
**—A TURNING POINT**

**Published by :** EPRLF Department
for Propaganda and Information.

# போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயம்

*வரலாறு எப்போதும் முன்னோக்கியே செல்கிறது. வரலாற்றின் முன்னோககிய வளர்ச்சிப் பாதையில் தவறான பக்கம் நிற்பவர்கள் வீழ்வார்கள் சரியான பக்கம் நிற்பவர்கள் மட்டுமே வெல்வார்கள்.*

***ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் படையான மக்கள் விடுதலைப்படை 1983 செப்டெம்பர் 23-ம் திகதி இரவு 8 மணிக்கு மட்டக்களப்பிலுள்ள சிறீ லங்கா வதைமுகாமைத் தகர்த்து ஈழப் புரட்சிவாதிகளை மீட்டெடுத்தது.***

இப்புரட்சிகர நடவடிக்கையானது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதுத்தடம் பதித்துப் புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

1771-ல் பாரிஸ் நகரில் நிகழ்ந்த முதல் சிறைத்தகர்ப்பும் அதைத்தொடர்ந்து கியூபா, ரசியா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் நிகழ்ந்த சிறை உடைப்புகளும் அந்தந்த நாடுகளின் பிற்போக்குவாத ஆளும் வர்க்கங்களுக்குப் பேரிடியை வழங்கின. புரட்சியின் அக, புற ஆற்றல்களைப் பலப்படுத்தின. அவ்வாறுதான் ஈழ மண்ணில் நிகழ்ந்துள்ள சிறைத்தகர்ப்பும் ஈழ விடுதலைப் புரட்சியின் அகநிலை, புறநிலை ஆற்றல்களைப் பலப்படுத்த உதவியுள்ளது. ஈழ மக்களின் புரட்சிகர வலிமையைச் சர்வதேச அரங்கில் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

ஈழ மக்களின் விடுதலைக்கான போராட்டம், ஆரம்பத்தில்ஆயுதம்தாங்காத போராட்ட வடிவத்திலும், 1975க்குப்பின் அது தனிநபர் பயங்கரவாதம்என்றவடிவத்திலும் நிகழ்ந்துள்ளது. ஆனால் இந்தச் சிறைத்தகர்ப்பு நிகழ்ச்சியானது ஈழ விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகர அரசியல் தலைமையிலான ஆயுதப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளது.

''மறைந்திருந்து தாக்கு, பின் ஓடு'' ''தனிநபர்களை அடித்து வீழ்த்து, பிறகு மறைந்து கொள்'' என்ற வடிவத்தில் தனிநபர் ஆயுதக் குழுக்களால் நடத்தப்பட்ட ஒழுங்கமையாத இராணுவ நடவடிக்கைகள் **புரட்சிகர அரசியல் தலைமையால் தலைமைதாங்கி வழிநடத்தப்படும் புரட்சிகர மக்கள் ஆயுதப் போராட்டமாக** மாறிவரும் நிலையைச் சிறை உடைப்புச் சம்பவம் தெளிவுபடுத்தியுள்ளது.

1983 ஆகஸ்டில் சிறீலங்காவின் தரகு முதலாளித்துவ, சிங்கள நிலப்பிரபுத்துவ அரசு தனது வதைமுகாமில் படுகொலை நடவடிக்கையைக் கட்டவிழ்த்து விட்டது. பேரினவாத வெறியூட்டப்பட்ட சிங்களக் கைதிகள் மூலம் தனது கொலைகார நடவடிக்கையைத் திட்டமிட்ட முறையில் செயல்படுத்தியது. இக் கோரத்தனமான கொலைவெறி வேட்டையில் ஈழப் புரட்சிவாதிகளும், தமிழ்க்கைதிகளும் கண்கள் பறிக்கப்பட்டும் தலைகள் வெட்டப்பட்டும் உருக்குலைக்கப்பட்டு படுகொலையாகினர்.

மனித நாகரீகங்கள் மீது மாறாத வடுவை ஏற்படுத்திய இக் குரூரக்கொலைகள் விடுதலைக்காகப் போராடும் ஈழ மக்களிடம் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது. சிறீலங்கா நவபாசிஸ்டுக்களது சுயரூபத்தை அம்பலமாக்கியது. பகைவனின் பலம் பற்றிய தவறான கணிப்பீடு ஈழமக்களிடம் ஏற்பட்டது. ''சிறை சென்றால் மீளமுடியாது என்னும் மனோநிலையும் உருவானது. எத்தகைய நிலைக்கும் மக்களைப் பக்குவப்படுத்தி, அவர்களை அமைப்பு



ரீதியாக அணிதிரட்டாத தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கண்ட மனோநிலைகளை அதிகரிக்கச் செய்யுமே தவிர இல்லாதொழிக்காது என்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நன்கு உணர்ந்திருந்தது.

ஈழ விடுதலைக்காகப் போராடும் மக்களை அச்சுறுத்தி ஈழப்போராட்டத்தின் குரல்வளையை நெரிக்க பிரிவினைத் தடைச்சட்டத்தையும் சிறீலங்கா நவபாசிசஅரசு கொண்டு வந்தது.

சிறீலங்கா அரசின் இத்தகைய அடக்குமுறைச்சட்டங்களையும், எதிரியின் பலம் பற்றிய தவறான கணிப்பீட்டையும் இல்லாதொழிக்க ஒரு மாற்று அரசியல் நடவடிக்கையை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்ல வேண்டியது அவசியமாகியது.

★ புரட்சிவாதிகள் மக்களுக்காகப் போராடுபவர்கள், பகைவனால் சிறை கொள்ளப்பட்டால் அவர்களை மீட்டெடுக்க எம்மால் முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டவேண்டும்.

★ ஆயிரம் சிறைப்படுகொலைகள் செய்தாலும் ஈழப்புரட்சிவாதிகள் ஒருபோதும் பணியப்போவதில்லை; என்பதைச் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளருக்கு உணர்த்துவது. பகைவனின் முகாமிலுள்ள தோழர்களை மீட்டெடுப்பதன் மூலம் எமது புரட்சியின் பணிகளைத் துரிதப்படுத்துவது. இந்தப்புரட்சிகர கடமைகளை நிறைவேற்ற இராணுவ நடவடிக்கை அவசியமாகியது. இதனால்தான் மக்கள் விடுதலைப்படைக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மட்டுநகர் வதைமுகாமைத் தகர்க்குமாறு ஆணையிட்டது.

இச்சிறை உடைப்பு நிகழ்வின் போது **தோழர் தளபதி குணசேகரன்** தலைமையில் செயல்பட்ட மக்கள் விடுதலைப் படையினர் ''சிறைக் காவலரார்'' கடமையாற்றியவர்களுக்கோ, வேறு எவருக்குமோ எவ்விதமான பாதிப்புமின்றித் திட்டமிட்டபடி புரட்சிவாதிகளை

மீட்டெடுத்தனர். சிறீலங்கா அரசின் கூலிப்படைகளின் கவனத்தைத் திசைதிருப்ப பல்வேறு காரணங்களுக்காகச் சிறையிலிருந்தவர்களையும் மக்கள் விடுதலைப்படை விடுவித்தது. இவர்களை மட்டுமே சிறீலங்கா கொலைப் பட்டாளங்களால் கைது செய்ய முடிந்தது. மீட்கப்பட்ட எந்தவொரு புரட்சிவாதியையும் இதுவரை சிறீலங்கா பாசிஸ்டுக்களால் கைது செய்ய முடியவில்லை, **மக்களைச் சார்ந்து நிற்பதன் மூலம் புரட்சிவாதிகளை மீட்கவும் முடியும், பாதுகாக்கவும் முடியும்** என்பதை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உணர்த்தியுள்ளது.

மட்டுநகர் மாதிரியான மிகவும் சிறிய குறுகலான நகரத்திலிருக்கும் மிகப் பாதுகாப்பான சிறையில் இருந்து புரட்சிவாதிகளை மீட்டெடுத்துப் பாதுகாப்பது என்பது இலகுவான காரியமன்று.

*ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், அதன் வெகு ஜன அமைப்புக்களும் மக்கள் மத்தியில் ஆற்றிய அரசியல் வேலையும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு ஈழ மக்கள் மத்தியிலுள்ள பலமான அடித்தளமுமே சிறை உடைப்பின் வெற்றிக்குக் காரணமாயின.*

சிறைத்தகர்ப்பு நிகழ்ச்சி ஈழமக்களுக்குப் புதிய நம்பிக்கையையும், புதிய உத்வேகத்தையும் அளித்துள்ளது. இராணுவ நடவடிக்கை என்பது புரட்சிகர அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே தவிர, பயங்கர சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கில்லை என்பதை உணர்த்துவதாகவும் இது உள்ளது.

*நீடுழி வாழ்க! ஈழமக்கள் புரட்சிகர*
*விடுதலை முன்னணி*
*வாழ்க! மக்கள் விடுதலைப்படை*
*வெல்க! ஈழமக்கள் புரட்சிகர*
*விடுதலைப் போராட்டம்!!*

# இனம் கண்டு கொள்ளுங்கள்

ஈழவிடுதலைக்காகப் போராடிவரும சில இயக்கங்கள் தமக்கிடையில் கொலைகாரத்தன இழுபறியில் கடந்த காலங்களில் ஈடுபட்டு வந்தன. இதற்கு உதாரணமாகச் **சுந்தரம் கொலை, இறைகுமாரன் கொலை, உமைகுமாரன் கொலை, பாண்டிபஜார் துப்பாக்கிச் சூடுகள், தேவன் கொலை,** போன்றவற்றைக் கூறமுடியும். இது காலம் வரை இக்கொலைக்காரத்தன இழுபறிகள் உமாமகேஸ்வரன் தலைமையிலான இயக்கத்துக்கும் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே இருந்து வந்தது. ஆனால் உமாமகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் இன்று இத்துறையில் இன்னும் ஒருபடி முன்னேறியுள்ளது.

மார்க்சீய, லெனினியத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்றும், மக்கள் விடுதலையில் நம்பிக்கை கொண்டவர்கள் என்றும் தம்மை பறைசாற்றிக் கொள்ளும் இவர்கள் இன்று ஏனைய இயக்கங்களையும் மிரட்டத் தொடங்கியுள்ளார்கள். சாதாரண பாராளுமன்ற அரசியல்வாதிகளை விட மிகக்கேவலமான பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளது மிகவும் வருந்தத் தக்கது. ஈழத்து மக்கள் மத்தியில் எந்தவித அடித்தளமும் இல்லாத இவர்கள், நாம் செய்த சிறையுடைப்புச் சம்பவத்தை தாம் செய்ததாகக் கூறி அரசியல் பிழைப்பு நடத்துகிறார்கள். மக்கள் மத்தியில் தமது கருத்துகள், கொள்கைகளைச் சொல்லி அரசியல் நடத்த முடியாத இவர்கள், இன்று ஏனைய இயக்கங்களை மிரட்டுவதன் மூலம் அதனைச் சாதிக்க முடியும் என்று நம்புகின்றார்கள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் ஒருவர், உமா குழுவினரால் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக சித்திரவதை செய்யப் பட்டுள்ளார். இதனைவிட இன்னும் சில தோழர்கள் இவர்களினால் மிரட்டப்பட்டுள்ளார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன ?

தோழர்கள் எமது முன்னணியால் கொடுக்கப்பட்ட மட்டக்களப்பு சிறையடைப்பு சம்பந்தமான சுவரொட்டி கள் ஒட்டியதே. சுவரொட்டிகள் கூட உமாகுழுவைத் தாக்கி எழுதப்பட்டதல்ல. எந்த இடத்திலும் அவர்களது இயக்கத்தின் பெயரோ அன்றி அவ்வியக்கத்தில் உள்ள தனிநபர்களின் பெயரோ கூட அச்சுவரொட்டிகளில் இல்லை, இருந்தும் கூட தோழர்கள் இவர்களினால் தாக்கப்பட்டுள்ளார்கள். ஏன்? மட்டக்களப்புச் சிறையை உடைத்து அங்கிருந்த ஈழப்போராளிகளை மீட்டெடுத்தது ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சார்ந்த மக்கள் விடுதலைப் படையென்பது உலகறிந்த உண்மை, இதனைத் தாங்கள் தான் செய்ததாகவும், வேறு யாராவது செய்ததாக உரிமை கொண்டாடினால் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்ற அவர்களின் ''அரசியல் கருத்தின்'' அடிப்படை யிலும் இந்தக் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகின்றது. இந்நிலையில் மட்டக்களப்புச் சிறையுடைப்பு சம்பந்தமான உண்மை நிலையையும் நாம் மக்களுக்கு எடுத்துக்கூறவேண்டியது எமது கடமையாகின்றது.

மட்டக்களப்புச் சிறையுடைப்புச் சம்பவமானது ஈ.பி. ஆர். எல். எப். இன் **ஆயுதப்படையான மக்கள் விடுதலைப் படையால்** திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு நடவடிக்கை யாகும். அதாவது சிறையுடைப்பு சம்பந்தமாகவும் அவர்களை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்குமான சகல வெளிநடவடிக்கைகளும் மக்கள் விடுதலைப்படை யினாலேயே மேற்கொள்ளப்பட்டது. சிறைக்கு உள்ளே



இது சம்பந்தமாக அங்கிருந்த சகல போராளிகளும் கூட் டாக ஈடுபட்டார்கள் என்பதையும் நாம் எந்த நேரமும் மறக்கவில்லை. சிறையில் இருக்கும் போராளிகள் வெளி வருவதெனில் கட்டாயமாக இதில் அவர்கள் ஒவ்வொரு வரின் பங்கும் முக்கியமானது. இவ்வகையில் கூட்டான நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்பது தவிர்க்க முடியாததே. இதனை வைத்துக்கொண்டு தாம் தான் சிறையுடைப்பை நடத்தினோம் என்றால் அது சிறு பிள்ளைத்தனமானது மாத்திரமல்ல, கீழ்த்தரமானதும் கூட. இப்பொழுது உமாகுழுவினர் வெளியிலும் தாம் தான் சகல நடவடிக்கைகளையும் ஆயுதங்களையும் செய்த தாகக் கூறுகின்றனர். அதற்கு மேலாக எமது மக்கள் விடுதலைப்படை என்னென்னவற்றை செய்ததாக அறிக்கை வெளியிட்டதோ இன்று அவற்றையெல்லாம் தாம்தான் செய்ததாக உரிமை கொண்டாடுகிறார்கள்.

மட்டக்களப்பு சிறையுடைப்பு சம்பந்தமான திட்டத் தைத் தீட்டி அதை நாமே நடைமுறைப்படுத்தினோம். எனவே எந்தவித தயக்கமும் இல்லாமல் அதற்கு நாம் உரிமை கோரினோம். இப்பொழுதும் உரிமை கோரு கிறோம். உமாகுழுவினரும் இதற்கு உரிமை கோரினார் கள். அவர்கள் இதற்கு உரிமை கோரிய இலட்சணத்தை நாம் தெளிவாகப் பார்த்தாலே இந் நடவடிக்கையை யார் மேற் கொண்டது என்பதைத் துல்லியமாக உணரலாம்.

ஆரம்பத்தில் ஜோதிஸ்வரன் எனப்படும் கண்ணன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இராணுவத் தலைவரென தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு இதனை நாமே செய்தோம என உரிமைகோருகின்றார்.

(ஆதாரம் மாலைமுரசு)

பின்னர் வாமதேவன் என்பவர் தானே தமிழீழமக்கள் விடுதலைக்கழகத்தின் இராணுவத் தலைவர் எனக்கூறிக் கொண்டு தான் தான் இச்சிறையுடைப்பு நடவடிக்கைக்கு

திட்டம் தீட்டி அதை நடாத்தி முடித்ததாகக் கூறுகின்றார். (ஆதாரம் : நியூஸ்டுடே). இதே வாமதேவன் இன்னொரு பத்திரிகையில் டேவிட்தான் இதற்குத்திட்டம தீட்டினாரென்றும் தான் இதை நடைமுறைப்படுத்தியதாகவும் கூறுகின்றார்.

ஐப்பசி மாத ''மக்கள்பாதை மலர்கிறது'' என்ற பத்திரிகை நில அளவையாளரான உமாமகேஸ்வரனே இதற்கான திட்டத்தை தீட்டினாரென்றும் இதற்கு டேவிட் உதவி செய்தாரென்றும் கூறுகின்றது. இன்னும் பல பத்திரிகைகளில் பலமாதிரியான செய்திகள் வந்திருந்தாலும் கூட, இந்தச் செய்திகளே உண்மையைக் கண்டுபிடிக்க போதுமானவை என நம்புகிறோம்.

*உண்மையில் மட்டக்களப்பு சிறையுடைப்பு நடவடிக்கையை இவர்கள் தான் மேற்கொண்டார்களெனில் நான்கு முரண்பட்ட அறிக்கைகள் வருவதற்குக் காரணமென்ன? மக்களே சிந்தியுங்கள்.*

இன்று எம்மீது பல குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றார்கள். எந்த ஒரு குற்றச்சாட்டுக்கும் நாம் பதில் சொல்ல தயாராகவே இருக்கின்றோம். உதாரணத்துக்கு ஒரு குற்றச்சாட்டை எடுத்துக் கொள்வோம். **ஆகஸ்ட் 23-ம் திகதி சிறையுடைப்பு** நடவடிக்கைக்குத்தாம் திட்டம் போட்டதாகவும் அதை நாம் காட்டிக்கொடுத்து விட்டதாகவும் கூறுகினறனர். உண்மையில் ஆகஸ்ட் 23-ல் நடந்ததென்ன? வாசுதேவா என்றழைக்கப்படும் உமா குழுவைச் சார்ந்த நண்பரொருவர் குட்டிமணி, ஜெகன் கொலைசெய்யப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து 23, 24, 25- இல் மட்டக்களப்பில் அர்த்தால் நடாத்த ஏற்பாடு செய்தார். அதே தினங்களில் பஸ் வண்டிகள் ஜீப்கள் எரிக்கப்பட்டதால் மட்டக்களப்பில் கூடுதல் இராணுவம் குவிக்கப்பட்டு, மட்டக்களப்பே பலத்த காவலில் வைக்கப்பட்டது. ஆகஸ்ட் 23-இல் மட்டக்களப்பு சிறையை



உடைக்கத் திட்டம் போட்டார்களா? இல்லையேல் நாம் நடத்த இருந்த சிறையுடைப்பு நடவடிக்கையைத் தடை செய்ய அர்த்தால் ஒழுங்கு செய்தார்களா? இது எதைக் காட்டுகிறது? மக்களே சிந்தியுங்கள். சிறை உடைக்கப் போகிறோம் என்று நாங்கள் காட்டிக் கொடுத்ததாகக் கூறினால் செப்டம்பர் 23-ம் தேதி மட்டும் சிறையை உடைக்க என்ன அனுமதி தந்தார்களா? யாரை முட்டாளாக்க முயற்சிக்கிறார்கள். மட்டக்களப்பு மக்களுக்குத் தெரியும் ஆகஸ்ட் 23-ல் வசுதேவா என்ன செய்தாரென்று, இதற்கு மேலால் வாசுதேவாவிற்கும், மட்டக்களப்பு எஸ். பி. நூர்டினுக்கும் உள்ள தொடர்பையும் நாம் அறிவோம்.

அடுத்த இன்னுமொரு குற்றச்சாட்டு திருமதி நிர்மலா நித்தியானந்தனைத் தோழரான தேவானந்தா என்பவர் தான் கூடடி வருவதாக இருந்ததாகவும், ஆனால் அவர் அக்கடமையைச் செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். இப்பொழுது நித்தியானந்தன் உயிருடன் தான் உள்ளார். அத்துடன் அவர் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்றார். அவரிடம் கேட்டாலே உண்மை புரியும். உமா குழுவைச் சார்ந்ததாக தற்சமயம் கூறப்படும் மாணிக்கதாசனும், வாமதேவனுமே நிர்மலாவை அழைத்துவரும் பொறுப்பை ஏற்றார்கள். நிர்மலாவை தலையில் தூக்கி கொண்டு வந்தாவது அவரைக் காப்பாற்றுவோம் என்று நித்தியானந்தனுக்கு உறுதி கூறினார்கள். எனவே எல்லோரும் சம்மதித்தே இவ்விருவரிடமும் நிர்மலாவை மீட்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த ''வீரர்கள்'' இருவரும் எல்லோருக்கும் முன்னால் வந்து வானில் ஏறிவிட்டார்கள். பின்னர் இப்பொழுது தாம் விட்ட இத் தவறை தேவானந்தா மேல் போடுகின்றார்கள். உண்மையில் நடந்ததென்ன? நிர்மலாவை யாரும் விடுவிக்கவில்லை என்பதை அறிந்த தேவானந்தா தனது கைக்குக்கிடைத்த சாவிக்கொத்துடன் நிர்மலாவின் கதவைத் திறக்க முயற்சி செய்தார்; முடிய

வில்லை; தனியாக அவரால் கம்பிகளை உடைக்கவும் முடியவில்லை. எனவே வேறு சில தோழர்களை அழைத்துவர ஓடினார். அப்பொழுது சாதாரண கைதிகள் குழப்பம் விளைவிக்கத் தொடங்கிவிட்டார்கள். அத்துடன் சகல அரசியல் கைதிகளும் வெளியேறியது மாத்திரமல்லாமல் சாதாரண கைதிகளும் வெளியேறத் தொடங்கிவிட்டார்கள். இதனால் தேவானந்தாவும் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே தான் அவரால் நிர்மலாவைக் காப்பாற்ற முடியவில்லை. இது மிகவும் துரதிஷ்டவசமானதே. மாணிக்கதாசனுக்கும், வாமதேவனுக்கும் கொடுக்கப்பட்ட கடமையைச் சரிவர செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இந்த உண்மைகளை மறந்துவிட்டு எமது தோழர்கள் மேல் குற்றம் சுமத்துகிறார்கள்.

இதில் இரண்டு விஷயங்களை நாம் கவனிக்கலாம். ஒன்று இவர்களே இதைச் செய்திருந்தால் முரண்பட்ட செய்திகள் வர நியாயம் இல்லை. இரண்டாவது இவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் யாவும் அப்பட்டமான பொய்யே என்பதிலும் சந்தேகமில்லை. இன்னும் சிரிப்புக்குரிய பல செய்திகளை இவர்களே பத்திரிகைக்குக் கொடுத்திருந்தாலும் அவற்றையெல்லாம் சுட்டிக்காட்ட நாம் விரும்பவில்லை. அவர்களது பொய்கள் புளுகுகளுக்கு நாம் பதில் எழுதுவதெனில் நாம் ஒரு புத்தகமே எழுதலாம். எனவே அவற்றை எல்லாம் இங்கே தவிர்த்துக் கொள்கின்றோம். மட்டக்களப்பு சிறையுடைப்பு நடவடிக்கையை யார் மேற்கொண்டார்கள் என்பது உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும். நாம் செய்த நடவடிக்கைக்கு நாம் உரிமை கொண்டாடுவது தவறா? மக்களே நீங்கள் தீர்ப்புக் கூறுங்கள்.

நாம் செய்யாத ஒரு நடவடிக்கைக்கு உரிமை கொண்டாட விரும்பி இருந்தால் ஆனைக் கோட்டை பொலிஸ் நிலையத்தைத் தாக்கியதையும் கிளி நொச்சி வங்கிக்



கொள்ளையை நடாத்தியதையும் உரிமை கொண்டாடி இருப்போம். ஆனால் செய்யவில்லை. ஏன் எமக்குப் பேரும் புகழும் முக்கியமல்ல. எமது நோக்கமெல்லாம் மக்கள் விடுதலையே. செய்யாத ஒன்றைச் செய்ததாகச் கூறித்தான் நாம் அமைப்பை வளர்க்க வேண்டும் என்ற எந்தவொரு நிர்ப்பந்தமோ, அவசியமோ எமக்கில்லை. **எமக்கென்று கொள்கைகள், இலட்சியங்கள் உண்டு, அதனடிப்படையில் மக்களை அணிதிரட்டும் வலுவும் திறனும் எமக்குண்டு**. எனவே ஒட்டுண்ணிகள் மாதிரி நாம் யாரிலும் தங்கியிருந்து தான் எதையும் சாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை, ஆனால் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்திற்கோ அப்படி இல்லை. உண்மையிலேயே அவர்களைக் கண்டிக்க வேண்டியவர்கள் நாங்கள். ஆனால் அவர்கள் இன்று எம்மை மிரட்டுவதிலும் எமது தோழர்களைச் சித்திரவதை செய்வதிலும் இறங்கியுள்ளார்கள். இந்த அநாகரிகமான வேலைகளை எம்மாலும் செய்ய முடியாதென்பதல்ல. ஆனால் அநாகரீகமான வழிகளில் எமது இயக்கத்தை வளர்க்க நாங்கள் விரும்பவில்லை. எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்பதை நாம் நன்றாகவே புரிந்து வைத்துள்ளோம். எமது துப்பாக்கிகள் என்றும் எதிரிக்கெதிராகவே இருக்கும் என்பதில் உறுதியாக உள்ளோம். ஆனால் துப்பாக்கி தூக்கியவர்கள் எல்லாம் எல்லோரையும் சுடலாம். எல்லோரையும் மிரட்டலாம் என்ற நிலைப்பாட்டிற்கு இவர்கள் வந்திருப்பார்களாயின் இவர்களும் எமது எதிரிகளே.

எமது போராட்டமானது சிறீலங்கா நவபாசிச அரசுக்கெதிராகப் போராடி சுதந்திர ஈழத்தைப் பெறுவதை நோக்கமாகக்கொண்டதே தவிர **இயக்கங்களுக்கிடையில் சுடுபட்டு இறப்பதை** நோக்கமாகக்கொண்டதன்று. ஆனால் விடுதலைக்காகப் போராடும் எமது தோழர்கள் இந்த நாலாந்தர குண்டர் கூட்டத்தால் சித்திரவதை செய்யப்பட்டும், அவர்களுடைய சைக்கிள், மணிக்கூடு ஆகியவை பறிக்கப்பட்டும் மிரட்டப்படும்

போது இவர்களை என்ன செய்வது? இவர்கள் உண்மையில் ஈழவிடுதலைக்காகப் போராடுகின்றார்களா?

இவற்றுக்கெல்லாம் **மக்களே நீங்கள்தான் தீர்ப்புக் கூறவேண்டும்**. இவர்களைச் சரியான முறையில் இனங் கண்டு இவர்களை ஒதுக்காதவரை, இல்லையேல் சரியான முறையில் மக்களுக்கு அம்பலப்படுத்தாத வரை இவர்கள் எமது தாயகமாம் ஈழத்தின் விடுதலைக்கு எதிரானவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் சுயநலங்களையும், பதவி ஆசைகளையும் கொண்ட பிற்போக்கு வாதிகளே தவிர உண்மையான விடுதலைப்போராளிகள் அல்ல. எனவே எமது அன்பிற்கினிய ஈழமக்களே இப்பிற்போக்குக் கும்பலை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்' **ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியில்** இணைந்து ஈழ விடுதலைக்கு உங்கள் பங்களிப்பைச் செலுத்துங்கள்.

வெல்க ஈழமக்கள் விடுதலைப் போராட்டம்

வாழ்க; ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# மட்டுநகர் வதைமுகாமிலிருந்து மீட்கப்பட்டோர் விபரம்

*1983* செப்டம்பர் *23*-ம் திகதி இரவு *8* மணிக்கு மட்டக்களப்பு சிறீலங்கா வதைமுகாமிலிருந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப்படையால் மீட்கப்பட்டோர் விபரம் :

| | |
|---|---|
| வரதராஜப் பெருமாள் | மகேஸ்வரராஜா |
| எஸ். பேரின்பராஜா | எஸ். சிவலிங்கம் |
| எஸ். சிறீஸ்கந்தராஜா | எஸ். பிரேமானந்தன் |
| எஸ். கோணேஸ்வரன் | ஜி. பத்மநாதன் |
| வி. சண்முகநாதசிவம் | வி. சுந்தரலிங்கம் |
| ரி. வஜயகுமார் | கே. தேவானந்தன் |
| ரி. தட்சிணாமூர்த்தி | வி. மகேந்திரன் |
| பி. பவானந்தன் | எஸ். யோகராஜா |
| ஜெயக்கொடி | ரி. மகேஸ்வரன் |
| வி. சிவசுப்பிரமணியன் | மாணிக்கம்ராஜன் |
| சண்முகம் சந்திரபாலன் | எஸ். கணேசலிங்கம் |
| எஸ். சிறீதரன் | ஞானசேகரம் |
| அ. அழகிரி | அகஸ்டின்போல் |
| சின்னராஜா | எஸ். ஜெயப்பிரகாஷ் |
| எஸ். ராஜாஜி | ரி. நித்தியானந்தன் |
| ஜெய சுந்தரராஜா | ஜெய்குலராஜா |
| அ. டேவிட் | ராமநாதன் |
| தங்க மகேந்திரன் | வாமதேவன் |
| ஞானவேல் | பரமதேவா |
| ரி. மரியநாயகம் | எஸ். நகுலேஸ்வரன் |
| எஸ். மகேஸ்வரன் | ரி. ஜெகதீசன் |
| குகதாசன் | கேந்திரன் |
| பாலேந்திரா | திருச்செல்வம் |
| பகீரதன் | மகேந்திரன் |
| கென்ரி | வடிவேல் |

## ★ சிகப்பு வணக்கம் ★

**வெலிக்கடையில் பகைவனின் வதைமுகாமில் மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள் தேவகுமார், பாஸ்கரன் படுகொலையாகினர். அவர்கள் நினைவாக...**

இனவெறிகொண்ட ஆளும் வர்க்கத்தின்
வெலிக்கடை முகாமில்
நியாய வெளிச்சங்கள் நிசப்தமாகின
மக்கள் யுத்தப் பாதையில் சென்ற
மக்கள் படையின் இருபெரும் தோழர்கள்
புனித உடல்களில்
மனித மிருகங்கள் வெறிகொண்டு தாவின
ஈழத்தாயகப் புதல்வர்கள் உடல்கள்
புத்தனின் பீடத்தில்...குருதி வெள்ளத்தில்......
கொலைகார முகாமில் குருதி சிந்தி
மக்களுக்காக மடிந்த தோழர்களுக்கு
**''சிகப்பு வணக்கம் செலுத்துக''**—எங்கள்
கட்சியின் கட்டளை பிறந்தது
மக்கள் படை செய்து முடித்தது
மட்டுநகரில் எதிரியின் முகாம்
தகர்க்கப்பட்டது ... இந்நிகழ்வு
சிகப்பு வணக்கமாய்
மக்கள் யுத்தத்தின் வெற்றிஈட்டலுக்கான
புரட்சிகரமான உந்துதல் முனையாய்
வரலாற்று ஏட்டில் புதுத்தடம் பதித்தது
விடுதலைக்கான புனித யுத்தத்தில்—எங்கள்
தோழர்கள் கனவை நிஜமாக்கிக் காட்டுவோம்
எங்கள் தோழர்கள் மறக்கப்பட்டவர்களல்ல;
இவர்களைக் கொன்ற
ஈழமக்களின் கொடிய பகைவர்கள்
மன்னிக்கப்பட வேண்டியவர்களுமல்ல

— **ஈழஇளங்கோ, செந்தணல் ஜனவரி 84.**

# மக்கள் விடுதலைப் படை

மக்கள் விடுதலைப் படையானது மட்டு நகர் சிறைமுகாமைத் தகர்த்த வரலாற்றுத் திருப்புமுனையான புரட்சிகர நடவடிக்கை மூலம் ஈழ மக்கள் விடுதலைப் போராட்டத் துக்கு மேலும் உத்வேகமூட்டியது. மக்கள் விடுதலைப்படையின் இந்தப் புரட்சிகர நடவடிக்கைக்கு மட்டுநகர் மக்களிடையே நடைபெற்ற வெகுஜன வேலைகளும், அதனால் கிடைத்த ஆதரவுமே காரண மாகும்.

இப்போது மக்கள் விடுதலைப் படையின் பயிற்சி முகாம்களில் இராணுவக் கல்வி ஆரம்பமாகிவிட்டது. சிறந்த பயிற்சிகளில் தேர்ச்சி பெறுவோர் நிரந்தர இராணுவத் துக்கும், ஏனையோர் மக்கள் மத்தியில் உள்ள ஆயுதப்பிரிவுகளுக்கும் தெரிவு செய்யவும் நியமிக்கவும்படுகிறார்கள்.